**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 150-2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 25.08.2025.**

| **Name : தங்கவேல்** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**குறுக்கு விசாரணை-**

1) நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் பனங்காட்டில் பிறந்தது முதல் குடியிருந்து வருகிறேன். எதிரி குடும்பத்திற்கும் என் குடும்பத்திற்கும் நல்ல பழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் 7 வருடங்களாக உள்ளது. நான் பெயிண்டிங் கான்ட்ரேக்ட் கூலி தொழில் செய்து வருகிறேன். வெளியூருக்கும் பெயிண்டிங் கான்ட்ரேக்ட் செய்வேன் என்றால் ஆமாம். கோயம்பத்தூர், ஆத்தூர் போன்ற ஊர்களில் செய்வேன். என் மனைவி ஆத்தூரை சேர்ந்தவர்.

2) நான் தொழீல் ரீதியாக ஆத்தூர் போகும் போது தான் எனக்கும் என் மனைவிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் ஆமாம். எனக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2008ம் வருடம் நடந்தது. திருமணத்தின் போது என் மனைவி மைனர் என்றால் இல்லை. என் மனைவியின் பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் நடந்ததா என்றால் ஆமாம். நான் பொய் சொல்கிறேன் என்றும் திருமணத்தின் போது என் மனைவி மைனர் என்றும் அவர் பெற்றோர் சம்மதம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

3) என் மீது வேறு ஏதேனும் வழக்கு உள்ளதா என்றால் வழக்கு இருந்தது. தற்போது முடிந்துவிட்டது. ஊரில் தெரிந்தவர்களிடம் பணம் வாங்குவேன்

என்றால் இல்லை. ஊரில் உள்ள தெரிந்த நபர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு ஏமாற்றி மிரட்டுவது என் வழக்கம் என்றால் அவ்வாறு இல்லை. என் வீட்டிற்கும் எதிர்வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 200மீட்டர் தூரம் இருக்கும்.

4) எதிரியின் இரண்டாவது மனைவி குணவதி தெரியும் என்றால் தெரியும். அவர் இறந்துவிட்டார் எவ்வாறு இறந்தார் என்றால் மருந்து குடித்துவிட்டு இறந்துவிட்டார். மருந்து குடித்து தான் இறந்தார் என்று எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் குணவதியின் அக்கா என்னிடம் தெரிவித்தார். எதனால் மருந்து குடித்து இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு முன்பாக ஒரு வாரம் என்னிடம் பேசுவதில்லை.

5) எதிரிக்கும் அவரது மனைவிக்கும் சாருலதா என்ற பெண் உள்ளது என்றால் ஆமாம். சாருலதா தற்போது என்ன படித்து வருகிறார் என்றால் 10ம் வகுப்பு படித்து வருகிறார். சாருலதா பற்றி அனைத்து விவரமும் எனக்கு தெரியும் என்றால் பேசி வருவதால் எனக்கு தெரியும். சாருலதா பள்ளிக்கு செல்லும் போது என் வீட்டை கடந்து தான் செல்லவேண்டுமென்றால் ஆமாம்.

6) என் மனைவிக்கு ஆஸ்துமா உள்ளது என்றால் இல்லை. என் மனைவிக்கு ஆஸ்துமா உள்ளதால் நான் என் மனைவி, என் தாயார் ஆகியோர் சாருலதாவை எனக்கு திருமணம் செய்து வைக்க அவ்வப்போது தொந்தரவு செய்து வந்தோம் என்றால் சரியல்ல. சாருலதா பள்ளிக்கு செல்லும் போது வழிமறித்து ஆபாசமாக பேசி ஆபாச செய்கை செய்தேன் என்றால் சரியல்ல.

7) அதற்கு ஆதாரமாக பென் டிரைவ் தாக்கல் செய்வதை நான் ஏற்றுக் கொள்கிறேனா என்றால் நான் ஏற்றுக் கொள்ளவில்லை. பொய்யான ஆவணமாகும். இது சம்மந்தமாக புகார் கொடுத்து என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அந்த பெண் சொன்னதாக விசாரித்தார்கள். யார் வந்து விசாரித்தார்கள் என்றால் அனைத்து மகளிர் காவல் நிலையத்திலிருந்து காவல் ஆய்வாளர் மற்றும் குழந்தைகள் நல துறையிலிருந்து அலுவலர்கள் வந்து விசாரணை செய்தார்.

8) 01.02.2025 ம் தேதியன்று என்னை விசாரணை செய்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் மாலை 4 மணிக்கு விசாரித்தார்கள். என்னிடம் எவ்வளவு நேரம் விசாரித்தார்கள் என்றால் 20 நிமிடம் விசாரித்தார்கள். மாலை 4.20 மணிக்கு விசாரணை முடித்து கிளம்பி விட்டார்களா என்றால் ஆமாம். மதியழகன் வீட்டிற்கு சென்று விசாரித்தார்களா என்றால் ஆமாம். இந்த வழக்கின் சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 02.02.2025ம் தேதியன்று மாலை 6 மணிக்கு நடந்தது.

9). அப்போது நான் வீட்டில் இருந்தேனா என்றால் அப்போது தான் வந்தேன். அதற்கு முன்பாக எங்கு இருந்தேன் என்றால் விசேகத்திற்கு சென்றேன். எனது மாமா மகன் செந்தில்குமார் வீட்டு விசேத்திற்கு சென்றேன். உடன் மனைவி மற்றும் தாயார் இருவரையும் அழைத்து சென்றேன் என்றால் இல்லை. எத்தனை மணிக்கு விசேத்திற்கு சென்றேன் என்றால் மதியம் 2 மணிக்கு சென்றேன். விசேத்திற்கு சென்று விட்டு வெளியே சென்று விட்டு வந்தேனா என்றால் இல்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நான் விசேசத்திற்கு சென்று விட்டு மது அருந்தி விட்டு தான் வீட்டிற்கு வந்தேன் என்றால் இல்லை.

10). என் மனைவி மற்றும் தாயார் வீட்டில் இருந்தார்களா என்றால் ஆமாம். எனது மனைவியின் சாட்சியத்தில் எனது மனைவி மற்றும் தாயார் காட்டில் வேலை செய்ததாக சொல்கிறார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. நான் விசேத்திற்கு சென்று விட்டேன். நான் முன்னுக்கு பின் முரனாக எனது மனைவி வீட்டில் உள்ளது குறித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. எதற்காக மதியழகன் வீட்டிற்கு சென்றேன் என்றால் தப்ப கேட்டதால் அதனை பற்றி நான் கேட்க சென்றேன். பிறகு தான் எனது மனைவி மற்றும் தாயார் வந்தார்கள்.

11). சம்பவத்தன்று எனது வீட்டிற்கு மதியழகன் வரவில்லை என்றும், நான் கற்பனை கதை சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பத்தன்று நான் மத அருந்தி விட்டு நான் சாருலதாவை திருமணம் செய்ய சொல்லி கேட்க சென்றேன்

என்றால் அவ்வாறு இல்லை. மதியழகன் விட்டிற்கு நான் மற்றும் எனது மனைவி தாயார் ஆகியோர் தானாக சென்று தாக்கி பிரச்சனை செய்தோம் என்றால் இல்லை. மதியழகன் வீட்டில் உள்ள பைப் லைனை தாக்கி உடைத்து விட்டேன் என்றால் சரியல்ல. நான் மதியழகன் என்பவரை தாக்கும் நிகழ்வை காட்டும் புகைபடம் என்றால் இது பொய்யாகும். இந்த புகைபடத்தில் நான் உள்ளேனா என்றால் உள்ளேன். அந்த புகைபடத்தில் நான் தாக்குவது போல் உள்ளது என்றால் நான் தடுக்கிறேன். அந்த புகைபடத்தில் உள்ளவர் நான் என்றால் ஆமாம். புகைபடம் **சபொ 1** ஆகும்.

12). நான் எனது மனைவி தாயார் ஆகியோர் மதியழகன் என்பவரை தாக்கி அதில் இருந்து தப்பிக்க வேண்டி பொய் புகார் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இரவு நேரம் என்பதால் நேரம் தெரியவில்லை. எந்த அம்புலன்சில் சென்றோம் என்றால் தனியார் அம்புலன்சில் சென்றேன். நான் மதியழகனை தாக்கியதால் அவர் அரசு அம்புலன்ஸ அழைத்து அந்த அம்புலன்ஸ வரும் போது அந்த ஒட்டுனரை நான் மிரட்டினேன் என்றால் இல்லை

13). எனது தம்பிக்கு அம்புலன்ஸ் ஒட்டுனர் பழக்கம் என்பதால் வேனை அழைத்து அதில் சென்றேன் என்றால் நாங்கள் அழைத்தால் அம்புலன்ஸ் வந்ததது. நான் எங்கு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் மாலை 5 மணிக்கு சேர்ந்தேன். உடன் மனைவி இருந்தாரா என்றால் ஆமாம். நான் எத்தனை நாள் சிகச்சை பெற்றேன் என்றால் 4 நாட்கள் பெற்றேன். போலிசார் வந்து என்னை விசாரிதாரா என்றால் இரவு 8 மணிக்கு சேகர் என்பவர் வந்து விசாரித்தார்.

14). 4 நாட்கள் சிகச்சையில் இருந்து எப்போது டிஸ்சார்ஜ் ஆனேன் என்றால் 6ம் தேதி டிஸ்சார்ஜ் ஆனேன். 5ம் தேதி டிஸ்சார்ஜ் ஆகிவிட்டு பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. நான் போலிசார் விசாரிக்கும் போது முதல் விசாரணையில் சொன்னது போல் தான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சாருலதா வை மருத்துவமனையில் என்னை அடித்தாக சொல்லியுள்ளேன்

என்றால் இல்லை. வாக்குமுலத்தில் சாருலதா என்னை அடித்தாக பதற்றத்தல் சொன்னதாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். சாருலதா என்பவரை நீக்கி உள்ளார்கள் என்றால் ஆமாம். எனது சாட்சியம் முன்னுக்கு பின் முரனாக உள்ளது என்றால் சரியல்ல. சாருலதா என் மீது புகார் கொடுத்துள்ளதால் நான் எதிரி மீது பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 150-2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 25.08.2025.**

| | |
|---|---|
| **Name : யமுனா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**குறுக்கு விசாரணை-**

1). நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் வீட்டில் தான் உள்ளேன். நானும் மதியழகன் குடும்பத்தாரும் நல்ல பழக்க வழக்கத்தில் இருந்தோம் என்றால் ஆமாம். எதிரி முதல் மனைவி குணவதி எனக்கு நன்கு பழக்கமா என்றால் ஆமாம். அவர்களுக்கு சாருலதா என்ற பெண் உள்ளது என்றால் உள்ளது. சாருலதா பத்தாம் வகுப்பு படிக்கிறார் என்றால் ஆமாம். எனக்கு உடல் ரீதியான பிரச்சனை உள்ளதா என்றால் உள்ளது.

2). எனது பெண்ணுக்கு வயது வந்தர்க்கு சீர் செய்தோம் என்றால் 2024ம் வருடம் செய்தோம். அப்போது குணவதி அந்த நிகழ்ச்சிக்கு வந்தார்கள் என்றால் சாருலதாவுடன் வந்து கலந்துகொண்டார்கள். நான் எனது உடல் நிலை சரியில்லை என்று சொல்லி நானும் எனது மாமியாரும் சேர்ந்து சாருலதாவை எனது கணவருக்கு திருமணம் செய்து வைக்க கேட்டோம் என்றால் சரியல்ல.

3). மேற்சொன்ன நிகழ்ச்சியில் சாருலதாவை எனது கணவர் ஒரு அறைக்கு அழைத்து சென்று அவரை திருமணம் செய்ய வற்புறுத்தி கேட்டு சாருலதா சத்தம் போட்டு பிரச்சனை ஏற்பட்டது என்றால் இல்லை. தொடர்ந்து எனது கணவர் சாருலதாவை திருமணம் செய்ய வற்புறுத்தினார் என்றால் இல்லை. இது

சம்பந்தமாக என்னை யாராவது விசாரித்தார்களா என்றால் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் இருந்து ஆய்வாளர் மற்றும் இன்னொருவர் குழந்தை நலவாரியத்தில் இருந்து வந்தார்கள்.

4). வேறு யார் வந்தார்கள் என்றால் மாவட்ட நீதிமன்றத்தில் இருந்தும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருந்து வந்தார்கள். எந்த தேதியில் வந்து விசாரித்தார்கள் என்றால் 01.02.2025ம் தேதியன்று மாலை 4 மணி முதல் 4,20 வரை விசாரித்தார்கள். 4.20 மணிக்கு விசாரணை முடித்து விட்டு சென்றார்களா என்றால் ஆமாம்.சம்பவத்தன்று எனது கணவர் வெளியே சென்றாரா என்றால் ஒரு நிகழ்ச்சி சென்றிருந்தார். காலையில் சென்று விட்டடாரா என்றால் மதியம் 2 மணிக்கு சென்றார்.

5). மதியம் 2 மணி' வரை எனது கணவர் வீட்டில் தான் இருந்து வந்தார். எனது கணவர் மது அருந்தும் பழக்கம் உள்ளவாரா என்றால் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. சம்பவத்தன்று நான் வீட்டில் தான் இருக்கிறேனா என்றால் காட்டு வேலை செய்து விட்டு வீட்டில் இருந்தேன். எனது மாமியாரும் வீட்டில் தான் இருந்தாரா என்றால் காட்டு வேலை செய்து விட்டு வீட்டில் இருந்தார்.

6). சம்பவதன்று எதிரி எத்தனை மணிக்கு சந்தித்தார் என்றால் மாலை 3 மணிக்கு காட்டில் வேலை செய்து கொண்டு இருந்ததேன். எதிரி மாலை 3 டு 3.20 மணியளவில் சந்தித்தார். நான் வீட்டில் இருந்ததாக சொல்லிவிட்டு காட்டில் இருந்ததாக மாற்றி சொல்கிறேன் என்றால் வீடும் காடும் ஒன்றாக தான் உள்ளது. சம்பததன்று எதிரி என்னை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் காட்டில் மதியம் 3 மணிக்கு வேலை செய்ததாக சொல்லியுள்ள நிலையில் சம்பவத்தில் இல்லை என்றால் சரியல்ல.

7). எதிரி என்னிடம் வரவில்லை என்றும், நான் பொய்யான வாக்குமுலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது கணவர் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தார் என்றால் மாலை 4 மணிக்கு வந்தார். எதிரி வீட்டிற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும் எனது மாமியார் எனது கணவர் சென்றோம்.

அப்போது எதிரியை நான் தான் தாக்கினேன் என்றால் இல்லை. எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் இல்லை. எதிரி வீட்டிற்கு செல்லும் போது பொது மக்கள் யாராவது வந்தார்களா என்றால் ஆடு மேய்கும் நபர்கள் வந்தார்கள்.

8). எனது எத்தனை மணிக்கு மருத்துவமனையில் சேர்ந்தேன் என்றால் மாலை 5 மணிக்கு மேல் சேர்த்தேன். கணவர் எத்தனை நாள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் 4 நாட்கள் இருந்தார்.முதல் விசாரணையில் 3 நாட்கள் இருந்தாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 150–2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 25.08.2025.**

| | |
|---|---|
| **Name : அலமேலு** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**குறுக்கு விசாரணை–**

1). நான் வீட்டில் தான் உள்ளேன். எனது மகன் என்ன தொழில் செய்கிறார் என்றால் பெயிண்டிங் வேலை செய்கிறார். எனது பேத்தி எந்த தேதியில் சிர் செய்தேன் என்றால் ஆவணி யில் செய்தேன். எதிரி அவரது மனைவி ஆகியோர் நல்ல குடும்பம் என்றால் சரிதான். நல்ல பழக்கம் உள்ளது எனறால் ஆமாம். எனது மருமகளுக்கு அஸ்துமா நோய் உள்ளதா என்றால் இல்லை. எனது மகன் காதல் திருமணம் செய்தார் என்றால் ஆமாம்.

2). எனது மருமகளுக்கு திருமண சமயத்தில் என்ன வயது இருக்கும் என்றால் 14 வயது இருக்கும். எனது மகனுக்கு சாருலதாவை திருமணம் செய்ய கேட்டோம் என்றால் இல்லை. இது சம்பந்தமாக யாராவது என்னை விசாரித்தார்களா என்றால் அனைத்து மகளிர் காவல் நிலைத்தில் இருந்து 4ம் தேதி மாலை 4 மணிக்கு விசாரித்தார்கள்.

3). அப்போது நான் இருந்தேனா என்றால் இருந்தேன். 1 மணி நேரம் விசாரித்தார்கள். மாலை 5.30 மணி வரை விசாரித்தார்களா என்றால் மாலை 5.30 மணி வரை விசாரித்தார்கள். விசாரணை முடித்து எத்தனை மணிக்கு

சென்றார்கள் என்றால் 6 மணிக்கு சென்றார்கள். சம்பவம் எந்த தேதியில் நான் நடந்ததது என்றால் 22ம் தேதி நடந்ததது.

4). மதியழகன் எனது வீட்டிற்கு வந்து விட்டார் என்றால் எனது மருமகன் காட்டில் இருந்தார். வீட்டுக்கு வந்த போது சம்பவம் நடந்ததது. மதியழகன் வீட்டிற்கு வரவில்லை என்றால் ஆமாம். நான் எனது போலிசார் விசாரணையில் வீட்டிற்கு வந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் வீட்டிற்கு வரவில்லை. நான் எனது மகன் மருமகள் ஆகியோர் மதியழகன் வீட்டிற்கு சென்ற போது எதிரிகள் எங்களை அடித்தார்கள்.

5). மருத்துவமனைக்கு நான் சென்றேனா என்றால் எனது மகன் மற்றும் மருமகன் சென்றார். எனது மகன் எத்தனை நாட்கள் சிகச்சை பெற்றார் என்றால் 5 நாட்கள் சிகச்சை பெற்றார். எனது முதல் விசாரணையில் 3 நாட்கள் சிகச்சை எடுத்ததாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.